**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *274*** **நாள் : *16.09.2025***

**அடையாறு மண்டலத்திற்குட்பட்ட மாஞ்சோலை மயானபூமியில் ரூ.*2.70* இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள மேம்பாட்டுப் பணிகளை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் அவர்கள் இன்று *(16.09.2025)* தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-*168*, ஈக்காட்டுத்தாங்கல் மாஞ்சோலை மயானபூமியில் *2025-26*ஆம் ஆண்டு மூலதன நிதியில் ரூ.*2.70* இலட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை இன்று *(16.09.2025)* அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்த மயானபூமியில் புதியதாக எரிவாயு தகனமேடை, பராமரிப்பாளர் மற்றும் காவலர் அறைகள், கழிவறை, நடைபாதை, சுற்றுச்சுவர், நுழைவுவாயில், தெளிப்பு நீர்ப் பாசன வசதியுடன் பசுமைத் தாவரங்கள் நடுதல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர்கள் திரு.ஆர். துரைராஜ் (அடையாறு), திரு. எம். கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), மாமன்ற உறுப்பினர்கள் திரு. மோகன்குமார், திரு. ப. சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**